[8th March 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : இம்மாதிரி நகர மண்டபங்களைக் கட்டுவதற்கு நகராட்சிகள் எந்த அடிப்படை அம்சங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ஏதேனும் நிபந்தனை விதிக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த மாதிரி மண்டபங்களை நகராட்சியினுடைய பணத்திலிருந்து கட்டுவதிலே அவர்களுக்கு அதற்குரிய வருமானம் நல்ல முறையில் வருமா, ஜனங்களுக்கு சௌகரியம் செய்யக்கூடிய ஒரு நல்ல இடத்தில் கட்டக்கூடுமா, இந்த அம்சங்களெல்லாம் இருக்கின்றனவா என்பதை அவர்களும் பார்த்து பரிசீலனை செய்து கட்ட வேண்டும். சர்க்காரும் இவற்றைக் கவனித்துத் தான் அதற்கு அனுமதி வழங்குகிறது.

திரு. வை. சங்கரன் : முனிசிபல் டவுன்ஹால் கட்டுவதற்கு முனிசிபாலிட்டியில் பணம் ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்த விஷயமானது ரொம்ப நாட்களாக பெண்டிங்காக இருக்கிறது. இதில் சீக்கிரம் முடிவெடுப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுதே கலெக்டர் அபிப்பிராயம் கோரியிருக்கிறோம் என்று குறிப்பிட்டேன். இந்த உரிமை மாற்றம் செய்வதற்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்று கலெக்டர் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அங்கு வேறு பல காரியாலயங்கள் இருக்கின்றன. அவற்றிக்கு ஏதாவது இடைஞ்சல் இருக்கிறதா என்றெல்லாம் பார்த்துப் பரிசீலனை செய்து அவர்கள் பதில் சொல்லவேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : டவுன் ஹால் கட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது உதவித் தொகை அளிக்கும் திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கடனைக் கேட்டால் கடன் வழங்கலாம்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம்

* 203 கேள்வி.—**திரு. செ. மாதவன் :**
திரு. பி. கே. மூக்கை தேவர் :
திரு. மீ. கலியாணசுந்தரம் :
திரு. ஏ. குஞ்சன் நாடார் :
} கனம் முதல்

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தியா-பாகிஸ்தான் போரின் காரணமாக இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அண்மையில் இம் மாநிலத்தில் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

8th March 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Twenty-six post-operative in the theatre resulting in his death, in the Raja in the context of hostilities between India and Pakistan. The district-wise figures are as follows :—

Madras City	14
Chingleput	2
Thanjavur	2
Tiruchirappalli	4
Tirunelveli	3
Kanyakumari	1

திரு. செ. மாதவன்: இந்த 26 பேர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களா? முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மையா? அப்படியானால் அவர்கள் கைது செய்யப் படுவதற்கு முன்னால் அவர்கள் எந்தக் குற்றத்தைச் செய்தார்கள் என்று அரசாங்கம் கருதுகிறது அல்லது அவர்கள் பாதுகாப்பு விதிகளின்படி கைது செய்யப்பட்டார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை. அதிலும் அவர்களில் பாகிஸ்தானிலிருந்து வந்திருந்தவர்கள் சிலர் இருந்தார்கள். அவர்களுக்குக் கூட முஸ்லிம் லீகுடன் தொடர்பு இருந்ததா என்பதெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். எனக்குத் தெரியாது.

திரு. மு. கருணாநிதி: இந்த மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. அழகமுத்து, திரு. கிருஷ்ணமூர்த்தி இவர்கள் ஒரு கூட்டத்தில் பேசினார்கள் என்ற காரணத்திற்காக பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப் பட்டார்களா? அப்படியானால், அவர்கள் பேச்சில் குற்றம் கண்டால் வேறு சட்டப் பிரிவுகளின்கீழ் அவர்கள் கைது செய்ய பட்டிருக்கக் கூடாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி என்னிடம் தகவல் ஒன்றுமில்லை. அதைப்பற்றி ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்தப் பாதுகாப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்? விடுதலை செய்யப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட போரினையொட்டி பாதுகாப்பு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைப் பற்றியது இந்தக் கேள்வி. அது சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

[8th March 1966

திரு. கே. ஏ. மதியழகன் : உள்துறை அமைச்சர் திரு. நந்தா அவர்களிடமிருந்து இந்தியப் பாதுகாப்பு விதிகளைப் பெரும்பாலும் பயன்படுத்தக் கூடாது, மற்ற சட்டங்களைத் தான் பயன்படுத்த வேண்டும் என்று தாக்கீது வந்திருக்கிறதா ? அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்தோ அல்லது வேறு யாரிடமிருந்தோ தாக்கீது ஒன்றும் வரவில்லை. ஆகையினால் அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. மாதவன் : இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சமாதானம் ஏற்பட்டுவிட்டதால், ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் ? இல்லையென்றால் அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறினேன், இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று.

* 210 *Q.*—Sri M. KALYANASUNDARAM : }
Sri A. KUNJAN NADAR : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of "Left" communists still in detention under D.I.R., as on 17th January 1966; and

(*b*) when was the last review made by the Government ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The number of "Left" Communists in detention under Defence of India Rules as on 17th January 1966 is 91; and

(*b*) the last review was made by the Government in November 1965.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தப் பரிசீலனையின் போது என்ன முடிவுக்கு வந்தார்கள் ? மீதியிருக்கிற திரு. ராமமூர்த்தி, திரு. வெங்கட்டராமன் போன்ற தலைவர்களை விடுதலை செய்வது பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாதுகாப்பு விதிகளின்படி 'டெடின்யூ'-ஆக வைக்கப்பட்டவர்கள் விஷயம் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன் : பாதுகாப்புக் கைதிகளுக்குக் கொடுக்கக்கூடிய வசதிகள் சம்பந்தமாக நம்முடைய மாநிலத்திலுள்ள விதிமுறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தை நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. அந்தக் கருத்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?